DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

| | |
|---|---|
| Calender Miscellaneous | **C.C.No.89/2022** |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of witness for | Prosecution |
| | Defence |

| | | |
|---|---|---|
| Name | : | **முத்துமுருகன்** (Pw.3) |
| Father/Husband Name | : | **சீனிவெள்ளை** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day August of 2023

<u>(எதிரிகள் ஆஜர் )</u>

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது கம்பாளியில் குடியிருந்து வருகிறேன். நான் திருப்பூரில் பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அசா1 எனது அம்மா. ஆஜர் எதிரிகளை தெரியும். 06.11.2020 ம் தேதியன்று 11 மணிக்கு வயலில் எனது அம்மா வேலை செய்து கொண்டு இருந்தார். எதிரிகள் அனைவரும் எனது அம்மாவை அடித்துப் போட்டுவிட்டார்கள். நான் சம்பவ இடத்தில் இருந்தேன். சம்பவத்தை பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி–

2. எனது அப்பா பெயர் சீனிவெள்ளை. எனது அப்பாவிற்கு இன்னொரு மனைவி நல்லம்மாள் ஆவார். நல்லம்மாள் தான் மூத்ததாரம் என்றால் சரிதான். நான் இரண்டாம் தாரம் ராக்குவின் மகன் ஆவேன். மூத்ததாரம் நல்லம்மாளின் பிள்ளைகள் ஆஜர் 2 , 3 எதிரி ஆவார்கள். எங்களுக்கும் எதிரிகளுக்கும் சொத்து பிரச்சனை உள்ளது என்றால் இல்லை. மேற்படி சம்பவதன்று எனது அம்மா உழவு செய்த வயலானது எனது தாத்தா பெரியகருப்பன் பெயரில் உள்ளது. எதிரிகளுக்கு பங்கு கொடுக்காமல் நாங்கள் உழுது வருகிறோம் என்றால் சரிதான். நல்லம்மாள்வாரிசுகள்அந்த வயலில் பங்கு கேட்டதால்தான் எங்களுக்குள் பிரச்சனை என்றால் நகை திருப்புவதில் பிரச்சனை. நான் சொல்வதுபோல் நகை திருப்புவதில் பிரச்சனை இல்லை என்றாலும் வயலை நாங்கள் மட்டும் உழுது கொண்டு நல்லம்மாள் வாரிசுகளுக்கு கொடுக்காததால் பிரச்சனை என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லி உள்ளேன். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நாங்கள் எதிரிகளை அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எதிரிகள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள் என்று தெரிந்து கொண்டு நாங்கள் பொய்யாக வழக்கு கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

மறு விசாரணை –

3.இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.